
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 3 மார்ச் 2013

தனிப் பிரதி ரூ. 9/-



“ உன் காலைத் தள்ளாடவொட்டார்;
உன்னைக் காக்கிறவர் உறங்கார் ”

(சங்கீதம் 121 : 3)

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!!

# பதினாறாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## " திருமறை தியானம் " நேயர்கள் & " திருமறை ஆசான் " வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் :

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 6,7,8 - 2013 ( திங், செவ், புதன் )**

உணவும், தங்குமிடமும் இலவசம்
பதிவுக் கட்டணம்
பெரியவர்கள் ரூ 250/- சிறியவர்கள் ரூ. 150/-

ஆண்களும், பெண்களும் தங்குவதற்கு தனித்தனி இடவசதி உண்டு

சகல வசதிகளுடன் குடும்பமாகத் தங்குவதற்கு கட்டணத்துடன் கூடிய தனி அறைகளும் உண்டு

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**


**ஆசானின் போதனையில்....**


1. ஆசிரியர் உரை...........1
2. ஏன் நாங்கள் கர்த்தருடைய....9
3. பெண்கள் பகுதி...............14
4. வாலிபர் பகுதி....................18
5. தன்னடக்கம்............21
6. தேவத்துவம்.............23
7. எதை அறிக்கையிடுகிறாய் ...........26
8. வசன ரீதியான ......29


உங்கள் கவனத்திற்கு

- ★ ஆவிக்குரிய சிந்தை உள்ளவர்களுக்கு திருமறை ஆசான் மாத இதழை அறிமுகம் செய்யுங்கள்.
- ★ திருமறை ஆசானை படித்துவிட்டு பிறர் படித்து பயனடைய கொடுத்து உதவுங்கள்.
- ★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தகவல் கொடுங்கள்.
- ★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்துங்கள்.
- ★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதுங்கள்.
- ★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 26 MARCH 2013 Issue - 3**

ஆசிரியர் உரை

# எல்லாம் முடிந்தது

"முடிந்தது" என்ற வார்த்தை, பலதரப்பட்டவர்களால் அவரவர்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப அல்லது அந்தந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தப்படும் ஒரு முடிவு வார்த்தை. ஆம், ஒன்று முற்றுப்பெற்றுவிட்டது என்பதை அடையாளப்படுத்தவோ அல்லது ஒன்று தீர்ந்து விட்டது என்பதை எடுத்துச் சொல்லவோ அல்லது ஒன்று நிறைவேறிவிட்டது என்பதை அறிவிக்கவோ அல்லது ஒன்று இறுதியாகிவிட்டது என்பதைத் தெரிவிக்கவோ பயன் படுத்தப்படும். ஒன்று முடிந்து விட்டது என்று சொல்லிவிட்டால், "இனி எதுவுமே இல்லை என்பதே அதன் பொருள். ஆம், அதுபற்றி பேசுவ தற்கு ஒன்றுமில்லை", " மேற்கொண்டு கொடுப்பதற்கு ஒன்றுமில்லை, இனிமேல் செய்வதற்கு ஒன்றுமில்லை" என்றெல்லாம் பொருள்படும். இப்படிப்பட்ட சூழ்நிலையைக் கிட்டத்தட்ட ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைப் பாதையில் ஏதாவது ஒரு கட்டத்தில் எதிர்கொண்டிருப் போம் அல்லது இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மற்றவர்கள் இருந்து சொல்வதைக் கேட்கவாவது செய்திருப்போம். அப்படித்தானே!

ஒன்று முடிந்து விட்டது என்று சொல்லிவிட்டால், "இனி எதுவுமே இல்லை என்பதே அதன் பொருள். ஆம், அதுபற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை", "மேற்கொண்டு கொடுப்பதற்கு ஒன்றுமில்லை, இனிமேல் செய்வதற்கு ஒன்றுமில்லை" என்றெல்லாம் பொருள்படும்.

"முடிந்தது" என்னும் இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டின் காலத்தில், குறிப்பாக முதல் நூற்றாண்டின் முற்பாதியில் மிகவும் பிரபலம். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மூல மொழியாகிய கிரேக்கத்தில், "முடிந்தது"

என்ற வார்த்தைக்கு "Tet-el-es-tai" (டெடல் எஸ்டாய்) என்றுள்ளது. இக்கிரேக்க வார்த்தையிலிருந்து தான் "It is finished" என்று ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து "முடிந்தது" என்று தமிழுக்கும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ரோமச் சக்கரவர்த்திகள் உலகை ஆண்டு வந்த முதல் நூற்றாண்டுக் காலத்தில், "Tet-el-es-tai" என்ற வார்த்தை பொதுவான வழக்கத்தில் இருந்துள்ளது. இதன் நேரடிப் பொருள் " காலம் கழிந்தது " " ஒன்று முடிவுக்கு வந்தது", "தீர்ந்தது", "நிறைவேறியது" என்பன. இவ்வார்த்தை இப்படிப் பரந்த பொருளைக் கொண்டதாக இருந்தபடியால், சந்தைக் கடைகளிலிருந்து, சட்ட பரிபாலனம் நடக்கும் உயர் அமைப்புகள் வரை இவ் வார்த்தை வழக்கத்திலும், புழக்கதிலும் இருந்தது. இவ்வார்த்தையைத்தான் இயேசுவும் உலக மக்களின் பாவங்களுக்காகப் பாடுகள் பல பட்டு தன் ஜீவனை விடுவதற்கு முன் பயன்படுத்தியுள்ளார். இதுபற்றி யோவான் நற்செய்தியாளன், " இயேசு காடியை வாங்கின பின்பு, **முடிந்தது** என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார் " (யோவான் 19:30) என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

ஒருவேளை யோவான் இப்படியாக எழுதியிருந்தாலும், மற்ற மூன்று நற்செய்தியாளர்களும் இதே பகுதியை ஒரு கூடுதலான தகவலோடு வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். "இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார் " (மத். 27:56) என்று மத்தேயுவும், "இயேசு, மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார் " (மாற்கு 18:37) என்று

**நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள் இயேசு "முடிந்தேன்" என்று சொல்லவில்லை. மாறாக, "முடிந்தது" என்றே சொல்லியுள்ளர். இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் அதன் பொருளில் மாபெரும் வேறுபாடு உள்ளது.**

மாற்குவும், இயேசு; "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார் " (லூக். 23:46) என்று லூக்காவும் கூறியுள்ளனர். இந்த நான்கு நற்செய்தியாளர்களின் கூற்றையும் நாம் தொகுத்துப் பார்க்கும் போது நாம் ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. அது, இயேசு "**முடிந்தது**" என்று " **மகா சத்தமாய்** " கூறியுள்ளார் என்பது.

இயேசு ஆண்டவர் சிலுவையில் தொங்கினபோது எல்லா பெலனும் இழந்தவராக, சரீரத்திலிருந்த இரத்தமும், தண்ணீரும் வெளியேறி, நாவானது வறண்டு மேல் வாயோடே ஒட்டிக் கொண்ட நிலையிலும், "முடிந்தது" என்று மகா சத்தமிட்டுச் சொல்லியுள்ளார். இதன் மூலம், "முடிந்தது" என்ற வார்த்தை எல்லோர் காதிலும் விழ வேண்டுமென்று அக்கொடுமையான நிலையிலும் முழு முயற்சி எடுத்திருக்கிறார் என்றே தெரிகிறது. நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள் இயேசு "முடிந்தேன்" என்று சொல்லவில்லை. மாறாக, "முடிந்தது" என்றே சொல்லியுள்ளர். இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் அதன் பொருளில் மாபெரும் வேறுபாடு உள்ளது.

இயேசுவானவர் "முடிந்தது" என்று மகாசத்தமிட்டுச் சொன்னது ஒரு "வெற்றி முழக்கமாகவே" தெரிகிறது. அவர் இட்ட சத்தம் அப்படித்தான் சொல்கிறது! புரிகிறதா, இல்லையா? ஆண்டவர், தன்னுடைய ஆவியைப் பிதாவிடம் ஒப்புக் கொடுப்பதற்கு முன், "முடிந்தது" என்று இப்படி வெற்றி முழக்கமிட்டது நிறைய விளக்கங்களை நமக்குக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும், ஒரு மூன்று விளக்கங்களை மாத்திரம் நாம் இப்பொழுது தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

## I செலவழிக்க வேண்டிய காலத்தைச் செலவழித்து முடித்து விட்டார்

இரட்சகராகிய இயேசுவானவர் சிலுவையிலிருந்து "எல்லாம் முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்ட சொற்றொடரிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், மானிடத்தின் இரட்சிப்பிற்காக இப்பூமியில் செலவழிக்க வேண்டிய காலத்தை இயேசுவானவர் செலவழித்து முடித்து விட்டார் என்பது.

முதல் நூற்றாண்டுக் காலத்தில் குற்றம் செய்யும் ஒருவன் அதற்கான தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்படும் போது, அவன் அடைக்கப் படும் சிறை அறையின் கதவில், அவன் செய்த குற்றத் திற்காகச் சிறையில் செலவழிக்கப்பட வேண்டிய கால அளவு எழுதி ஒட்டப்படும். அப்படி அவன் அந்தக் காலத்தைக் கழித்து முடிக்கும் நாளில், ஏற்கனவே ஒட்டப் பட்டிருப்பது அகற்றப்பட்டு, "Tet-el-es-tai" என்று ஒட்டப்படும். அதாவது, அவன் சிறையில் கழிக்க வேண்டிய கால அளவைச் செலவழித்து முடித்து விட்டார். இப்பொழுது அவர் விடுதலைக்குத் தயார் என்பது அதன் பொருள்.

> "......நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34) என்று சொல்லி, அதற்காகத் தன்னை இயேசு ஒப்புக்கொடுத்திருந்தாலும், தான் விட்டு வந்த பரலோகத்திற்கான ஓர் ஏக்கம் அவருக்குள்ளாக இருந்தே வந்துள்ளது.

இவ்வார்த்தையின் சட்டரீதியன இப்பொருள், இயேசு சிலுவையில், "முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்டதற்கு ஒருவகையில் பொருந்துகிற தாகவே உள்ளது. ஏனெனில், இயேசு இப்பூமியில் செலவழிக்க வேண்டிய காலத்தைச் செலவழித்து தீர்த்து விட்டார் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

இயேசு இரட்சகர் ஒரு மனிதருமல்ல, இப்பூலோக வாசியுமல்ல. வேத வசனத்தைப் பாருங்கள். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது " என்றுள்ளது. (யோவான் 1:1) இப்படிப்பட்ட இயேசு தான் இப்பூவுலகம் வந்தார். ஒரு தண்டனையாக அல்ல. தேவச் சித்தத்தை நிறைவேற்ற வந்தார். அதே யோவான் ஆசிரியர், அதே அதிகாரம் 14-ம் வசனத்தில் இப்படியாக விவரிக்கிறார். " அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தி னாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்று.

நித்திய மகிழ்ச்சிக்கான இடமாகிய பரலோகத்திலிருந்து இப்பாழுலகம் வந்தது அவருடைய தன்மையில் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கியிருக்குமென்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். " ......நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34) என்று சொல்லி, அதற்காகத் தன்னை இயேசு ஒப்புக்கொடுத்திருந் தாலும், தான் விட்டு வந்த பரலோகத்திற்கான ஓர் ஏக்கம் அவருக்குள்ளாக இருந்தே வந்துள்ளது. எப்படியெனில், சிலுவைக்கு முந்தின நாள் அவர் ஜெபிக்கும்போது, " பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை மகிமைப்படுத்தும் " (யோவான் 17:5) என்று மன்றாடினார். சொல்லப்போனால் 17:4-ல், " நீர் நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் " என்று எடுத்துச் சொல்லி மன்றாடினார்.

ஆனாலும், இயேசுவின் இந்த மன்றாட்டு பரமப்பிதாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில், அவர் செய்து முடிக்கும்படியான கிரியைகள் இன்னும் இருந்தது. ஆம், நிறைவேற வேண்டிய வேத வாக்கியங்களும் இருந்தது. அத்தோடு, இயேசுவானவர் இப்பூமியில் கழிக்க வேண்டிய காலமும், பட வேண்டிய பாடுகளும் பாக்கியிருந்தது. இப்படிப் பாக்கியாயிருந்த அந்தப் பாடுகளின் வழியாகத் தாங்க முடியாத வேதனை களோடு கோரச் சிலுவையின் வேதனைகளை ஏற்று அவைகள் நிறைவடை யத்தக்க தருணம் வந்த போது தான் இப்படியாகச் சொன்னார். "அதன் பின்பு,

ஆனாலும், இயேசுவின் இந்த மன்றாட்டு பரமப்பிதாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில், அவர் செய்து முடிக்கும்படியான கிரியைகள் இன்னும் இருந்தது. ஆம், நிறைவேற வேண்டிய வேத வாக்கியங்களும் இருந்தது. அத்தோடு இயேசுவானவர் இப்பூமியில் கழிக்க வேண்டிய காலமும், பட வேண்டிய பாடுகளும் பாக்கியிருந்தது.

எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத் தக்கதாக; தாகமாயிருக்கிறேன் " என்றார். யோவான் 17:4ல், " நீர் நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் " என்று ஜெபித்த இயேசு, சிலுவைப் பாடுகளின் நிறைவில், " எல்லாம் முடிந்தது " என்று முழங்கினார். அதன் பிறகு தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்து விட்டார்.

ஆகையால், அருமையானவர்களே, "முடிந்தது" அல்லது "எல்லாம் முடிந்தது" என்பது, உலகத்தை மீட்கும்படியாக இப்பூமிக்கு வந்த பரலோகவாசியான இயேசுவானவர் இப்பூமியில் செலவழிக்க வேண்டிய காலத்தை செலவழித்து முடித்து விட்டார் என்று நமக்குச் சொல்லுகிறது. ஆகையால், இனி ஒரு முறை இயேசுவானவர் இப்பூமிக்கு வந்து, ராஜ்ஜியத்தை உண்டாக்கி அரசாளுவார் என்பதெல்லாம் வேத வசனங் களுக்கு மாறான போதனை. இயேசு மீண்டும் வருவார். ஆனால், இப்பூமிக் கல்ல. இயேசுவின் வருகைக்காக மிகுந்த ஆவலோடு காத்துக்கிடந்த தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதுவதைப் பாருங்கள். "பின்பு

உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட *ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு* இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்" (1 தெச. 4:17). ஆகையால், இயேசு இனி ஒருபோதும் பூமிக்கு வரப்போவதில்லை. ஏனெனில், இப்பூமியிலே, இயேசு செல வழிக்க வேண்டிய காலத்தைச் செலவழித்து முடித்துவிட்டார்.

## II செலுத்த வேண்டிய கிரயத்தைச் செலுத்தித் தீர்த்து விட்டார்

இரட்சகராகிய இயேசுவானவர், சிலுவையிலிருந்து "எல்லாம் முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்ட சொற்றொடரிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், மானிடத்தின் இரட்சிப்பிற்காக செலுத்த வேண்டிய கிரயத்தைச் செலுத்தித் தீர்த்து விட்டார் என்பது.

"Te-tel-es-tai" என்ற பொருள் பொதித்த இவ்வார்த்தை "சட்ட ரீதியாக" இயேசுவுக்கு எப்படிப் பொருந்தினது என்று கவனித்தோம். இப்போது, முடிந்தது என்று தமிழில் வரும் இதே வார்த்தை "கணக்கியல்" ரீதியாக எப்படி இயேசுவுக்குப் பொருந்துகிறது என்று கவனிப்போம்.

முதல் நூற்றாண்டுக் காலத்தில், தன் தேவைகளுக்காகக் கடன் பெறும் ஒருவன், அந்நாட்களில் வழக்கத்தில் இருந்த கடன் பத்திரத்தில் உறுதிமொழி கொடுத்துக் கையெழுத்திட வேண்டும். பிறகு, ஒரு கட்டத்தில் அவன் கடனை முழுமையாக அடைக்கும் போது அந்த உறுதிமொழிப்

> **அ**ன்பானவர்களே, இயேசு சிலுவையில் "முடிந்தது" என்று மகா சத்தமாய்ச் சொன்னபோது, மனிதனை இரட்சிக்கும்படியாய் இப்பூமிக்கு வந்த நான் (லூக். 19:10), மனிதனின் இரட்சிப்புக்குத் தேவையான அனைத்தையும், குறிப்பாகச் செலுத்த வேண்டிய கிரயத்தைச் செலுத்தி முடித்ததாகவே முழங்கியிருக்கிறார்.

பத்திரத்தின் குறுக்கே, "Te-tel-es-tai" என்று எழுதி வைப்பர். அதன் பொருள், கடன் பெற்றவர் "தான் செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் செலுத்தித் தீர்த்து விட்டார்" என்பது.

இரட்சகராகிய இயேசுவுக்கு, "முடிந்தது" என்ற வார்த்தை இப்பொருளிலும் பொருந்துகிறதாகவே உள்ளது. ஆம், இயேசு ஆண்டவர் இப்பூமிக்கு வந்து நிறைவேற்றிய காரியங்களில் ஒன்று. இரட்சிப்பிற்கான *விலை முழுவதையும்* கொடுத்து முடித்தது. இது குறித்து எபிரெயர் ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று பாருங்கள். "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்" (எபி. 9:12). நித்திய மீட்பை உண்டு பண்ணுவார் என்று எதிர்காலத்தில் சொல்லப்படாமல், உண்டு பண்ணினார் என்று கடந்த காலத்தில் சொல்லப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும். இன்னும், எபிரெயர் 10:10ல், "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம்

*பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்*" என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், எபி. 7:27ல், " அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காவும் நாடோறும் பலியிடப்படுவதில்லை; ஏனெனில், தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் *செய்து முடித்தார்*" என்றுள்ளது. இங்கே இயேசுவானவர் தம்முடைய பலியினாலே, செய்து முடித்தார் என்று ஆவியானவர் சொல்லுவதை ஆழ்ந்து நோக்குங்கள்.

அன்பானவர்களே, இயேசு சிலுவையில் "முடிந்தது" என்று மகா சத்தமாய்ச் சொன்னபோது, மனிதனை இரட்சிக்கும்படியாய் இப்பூமிக்கு வந்த நான் (லூக். 19:10), மனிதனின் இரட்சிப்புக்குத் தேவையான அனைத்தையும், குறிப்பாகச் செலுத்த வேண்டிய கிரயத்தைச் செலுத்தி முடித்ததாகவே முழங்கியிருக்கிறார். அப்படியானால், அந்த தியாக பலியின் பலனை நம்முடைய வாழ்க்கையில் பெற்று அனுபவிக்கும் ஒரு பக்தி வாழ்க்கையை நாம் நடத்துகிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தோடு, இனி செலுத்துவதற்கு ஒன்றுமில்லை என்னும் உண்மையைப் புரிந்தவர்களாக நம்முடைய பக்தி வாழ்க்கையில் செய்ய வேண்டியவைகளைச் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

## III பெற வேண்டிய வெற்றியைப் பெற்று முடித்துவிட்டார்

இரட்சகராகிய இயேசுவானவர், சிலுவையிலிருந்து "எல்லாம் முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்ட சொற்றொடரிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், மானிடத்தின் இரட்சிப்பிற்காகத் தான் பெற வேண்டிய வெற்றியைப் பெற்று முடித்து விட்டார் என்பது.

**இப்படி ஓர் ஒட்டு மொத்த வெற்றியை சிலுவையில் பெற்றபடியால் தான், முடிந்தது என்றும் எல்லாம் முடிந்தது என்றும் வெற்றி முழக்கமிட்டுள்ளார். இனி இயேசு ஆண்டவர் பெற வேண்டிய வெற்றி ஒன்றுமில்லை. சகல ஆவிக்குரிய வெற்றிகளையும் சிலுவையில் பெற்று முடித்துவிட்டார்.**

"Te-tel-es-tai" என்ற வார்த்தையின் பொருளை சட்டரீதியாகவும், கணக்கியல் ரீதியாகவும் கவனித்து அது இயேசு ஆண்டவருக்கு எப்படிப் பொருந்தினது என்று கவனித்தோம். இப்பொழுது, "முடிந்தது" என்று பொருள் தரும் இவ்வார்த்தை, இராணுவ ரீதியாக இயேசுவுக்கு எப்படிப் பொருந்துகிறது என்று தெரிந்து கொள்ளுவோம்.

அந்நாட்களில், ரோமத் தளபதிகளால் இவ்வார்த்தை வெற்றியைக் குறிக்கும்படியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, எதிரிகள் மீது படையெடுக்கும் ரோம இராணுவத்தின் தளபதிகள், அவர்களை மேற்கொண்டு, முறியடித்து, அவர்களில் பலரைச் சிறைபிடித்து, ரோமாபுரி நகர வீதிகளில் வெற்றி வலம் வரும் போது, இரண்டு கைகளையும் உயர்த்தி Te-tel-es-tai, Te-tel-es-tai என்று சத்தமிட்டு முழங்குவார்கள். அதன் பொருள், எதிரியை மேற்கொண்டு விட்டோம், அவன் நுகத்தடியை முறித்து விட்டோம், முழுமையான வெற்றியைப் பெற்றுவிட்டோம், பாருங்கள் அதற்கான அடையாளங்கள் என்று.

இராணுவ ரீதியிலான இப்பொருளும், இயேசுவுக்குப் பொருந்து கிறதாகவே உள்ளது. எப்படியெனில், அவர் சிலுவையில் “மரணத்தின் மீதும்”, “மரணத்திற்கு அதிகாரியான சாத்தான் மீதும்” வெற்றி சிறந்தார். எபிரெயர் ஆசிரியர் இது குறித்து இவ்விதம் எழுதியுள்ளார். “ ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய வரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தி னாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கும் அப்படியானார் ” (எபி. 2:14,15) என்று. இன்னும் பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும் போது, “ மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப் பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் ” என்று எழுதி இயேசு சிலுவையில் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுகிறார்.

இயேசுவின் சிலுவை வெற்றி, மரணத்தின்மீதும், சாத்தானின் மீதும் மட்டும் பெற்ற வெற்றி அல்ல. அது ஓர் ஒட்டுமொத்த வெற்றி. பவுலடி யார் கொலோசெயருக்கு எழுதும்போது அப்படித்தான் கூறியுள்ளார். “துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங் கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார் ” (கொலோ. 2:15). இப்படி ஓர் ஒட்டு மொத்த வெற்றியை சிலுவையில்

**வேத வசனங்கள் “ ராஜ்ஜியம் ஏற்படுத்தப்பட்டாயிற்று ” என்றும் அது இருக்கிறது என்றும் இவ்வளவு ஆணித்தரமாகச் சொல்லும்போது, முதல் முறை தோற்றுப் போன இயேசு மறுபடியும் வந்து, பூமியிலே இன்னொரு யுத்தம் நடத்தி ராஜ்ஜியத்தை ஏற்படுத்தவார் என்று கூறுவதையும், அதையும் ஒரு கூட்டம் நம்புவதையும் நாம் என்ன சொல்லுவது?**

பெற்றபடியால் தான், முடிந்தது என்றும், எல்லாம் முடிந்தது என்றும் வெற்றி முழக்கமிட்டுள்ளார். இனி இயேசு ஆண்டவர் பெற வேண்டிய வெற்றி ஒன்றுமில்லை. சகல ஆவிக்குரிய வெற்றிகளையும் சிலுவையில் பெற்று முடித்துவிட்டார்.

உண்மை நிலை இப்படியிருக்கும்போது, அவர் பெற வேண்டிய வெற்றி இன்னும் இருக்கிறது என்று யாரால் கூற முடியும்? அப்படி யாராவது கூறினால் அவர்கள் இயேசுவின் சிலுவை வெற்றியை கேலிக் கூத்தாக்கு கிறார்கள் என்றே பொருள். ஆயினும், “ ஆயிரம் வருட அரசாட்சி ” கொள்கைக்காரர்கள், இப்பூமியில் “ அர்மெகெதோன் ” யுத்தம் ஒன்று இருப்பதாகவும், அது அந்திக் கிறிஸ்துகளுக்கு எதிரான யுத்தம் என்றும், இயேசு அந்தப் போரை முன்னின்று நடத்தி வெற்றி கண்டு இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்றும் சொல்லுகிறார்கள். யார் சொல்லுவதை நம்புவது? “ முடிந்தது ” என்று இயேசுக் கிறிஸ்து முழக்கமிட்டதை ஏற்றுக்கொள்வதா அல்லது இன்னும் “ பாக்கி ” இருக்கிறது என்று இந்த அற்ப மனிதர்கள் சொல்லு வதை நம்புவதா?

வேத வசனங்கள், இராஜ்ஜியம் ஏற்கனவே வாக்களிக்கப்பட்டு (லூக். 9:27) ஏற்படுத்தப்பட்டு விட்டதென்றும், ஆளுகைக்கான அதிகாரம் கொண்ட தேவனுடைய வலது கரத்தினாலே இயேசுவானவர் உயர்த்தப் பட்டு, வலது பாரிசத்தில் உட்கார்ந்து ஆளுகை செய்கிறார் என்றும் வேத வசனங்கள் திட்டமும், தெளிவுமாகக் கூறுகிறது (அப். 2:33,36). இன்னும், ராஜ்ஜியமானது "இருக்கிறதாக இருக்கிறது" என்றும், பவுலடியார் கொலோசயருக்கு எழுதும்போது கூறியுள்ளார் (கொலோ. 1:13). வேத வசனங்கள் " ராஜ்ஜியம் ஏற்படுத்தப்பட்டாயிற்று " என்றும், அது இருக்கிறது என்றும் இவ்வளவு ஆணித்தரமாகச் சொல்லும்போது, முதல் முறை தோற்றுப் போன இயேசு மறுபடியும் வந்து பூமியிலே, இன்னொரு யுத்தம் நடத்தி ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்று கூறுவதையும், அதையும் ஒரு கூட்டம் நம்புவதையும் நாம் என்ன சொல்லுவது? இது சத்தியத்திற்கு நேர் மாறானது, அவ்வளவு தான் சொல்ல முடியும்.

எனக்கன்பானவர்களே, "எல்லாம் முடிந்தது" என்று இயேசு ஆண்டவர் வெற்றி முழக்கமிட்டது எவ்வளவு ஆழமான பொருளைக் கொண்டிருக்கிறது என்று பாருங்கள். " எல்லாம் முடிந்தது " என்று முழங்கிய இந்த வெற்றி வேந்தர் உங்களுடைய வாழ்வில் எந்த இடத்தில் இருக்கிறார்? இந்த வெற்றி வேந்தரின் புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் உங்கள் வாழ்க்கையில் எந்த இடத்தில் உள்ளது? அல்லது அதற்கு நீங்கள் தரும் முக்கியத்துவம் என்ன? இந்த வெற்றி வேந்தர் வாக்களித்துக் கட்டின (மத். 16:18). ஒன்றான மெய்ச்சபையை (எபே. 4:4) உங்கள் வாழ்க்கையில் அடையாளம் கண்டு, அந்தச் சபையில் கிறிஸ்துவால் நீங்கள் சேர்க்கப்பட்டு விட்டீர்களா? (அப். 2:47). இந்த வெற்றிவேந்தரின் உபதேசக் கோட்பாடு களின்படி உங்கள் பக்தி வாழ்க்கையை நடத்தி, பரலோக பாக்கியத்திற்கு உங்களை ஆயத்தமாக்கிக் கொண்டு வருகிறீர்களா? சிந்திப்போம்! செயல் படுவோம் !!

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## FORM IV DECLARATION


Statement about ownership and other Particulars about the Newspaper Thirumarai Aasaan

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | - | Kangayam |
| 2. | Perodicity of Publication | - | Monthly |
| 3. | Printer's Name / Address | - | K.C. SENTHILKUMAR<br>50, Kovai Road, Kangayam. |
| 4. | Nationality | - | Indian |
| 5. | Publisher's Name, Address | - | S. RAJANAYAGAM<br>86-A, Dharapuram Road,<br>Kangayam. |
| 6. | Nationality | - | Indian |

I, S. RAJANAYAGAM, here by declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 20.3.2013

- Publisher



# ஏன் நாங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம்?

**Bro. J.C. சோட்**

கர்த்தருடைய பந்தி என்று வரும்போது, இயேசுவும், அப்போஸ்தலர்களும், பஸ்கா பண்டிகையில் பங்கு பெறும்படியாக எருசலேமிலுள்ள மேல் வீட்டில் கூடிவந்த சம்பவத்திற்கு நாம் செல்ல வேண்டியதாயிருக்கிறது. பஸ்கா பண்டிகையானது, ஆட்டுக்குட்டியின் இரத்தம் எந்த இஸ்ரவேலர்களின் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்டிருந்ததோ அவர்களின் வீடுகளை மரணதூதன் கடந்து போனதை நினைவு கூரும்படியாக வருடந்தோறும் கடைபிடிக்கப்பட்டது (யாத். 12). புதிய ஏற்பாட்டின் வருகையால் இந்தப் பண்டிகை விருந்து முடிந்து போய் விட்டது. இப்பொழுது கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுகிறார்கள்.

வேத வசனம் இப்படிச் சொல்கிறது, *“ அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் ”* (மத். 26:26-30) இன்னும் மாற்கு 14 வசனங்களிலும் இது குறித்துப் பேசப்பட்டிருக்கிறது.

கடைசியாக, லூக்கா இது குறித்து இவ்விதமாகப் பதிவு செய்துள்ளார். *“ வேளை வந்தபோது, அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி; நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி; நீங்கள் இதை வாங்கி,*

*உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப் பழரசத்தைப் பானம் பண்ணு வதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர் களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னு டைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்"* (லூக். 22:14-19).

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்டது பற்றி இந்த மூன்று புத்தகங்களிலும் விவரிக்கப்பட்டிருப்பவைகளிலிருந்து நாம் கவனிக்க வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. முதலாவது, முன்பே குறிப்பிட்டபடி இயேசு அந்த பஸ்கா போஜனத்தை, தம்முடைய சீஷர் களுக்கு ஒரு போஜனம் அல்லது நினைவு கூருதல் விருந்தாக அறிமுகப் படுத்தி, தம்முடைய மரணத்துக்குப் பிறகு அவர்கள் கைக்கொள்ளும் படியாகப் பயன்படுத்திக் கொண்டார். இயேசு, அப்பம் தன்னுடைய சரீரமாயிருக்கும் அல்லது தன் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கும் இயேசுவையும், அவருடைய பாடுகளையும் நினைவுகூரும்படியாக இதிலே பங்குபெற வேண்டுமென்றார். தொடர்ந்து, இயேசு அந்தப் பாத்திரம், திராட்சப் பழரசம் தன்னுடைய இரத்தம் என்று சொன்னார்; அதாவது, திராட்ச ரசம் அவருடைய இரத்தத்தை அடையாளப் படுத்தும். மனிதன் தன் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறும்படி கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது என்று அந்த திராட்ச ரசத்தை பானம்பண்ணும்போது நினைவுகூரப்படும். இந்த வசனப்பகுதியில், இயேசுவால் பேசப்படும் அப்பமானது, ஒருவேளை நாம் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால் கூட இயேசுவின் உண்மையான சரீரமாகாது. அதுபோலவே பாத்திரம், அந்த திராட்ச பழரசம் இயேசுவின் உண்மை யான இரத்தமாகாது. ஆனால், அவைகள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுபவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அல்லது ஞாபகப்படுத்தும். பஸ்காவானது புளிப்பில்லா அப்பத்தையும், திராட்சப்பழ ரசத்தையும் உள்ளடக்கியது என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். கிறிஸ்துவும், அப்போஸ்தலர் களும் பஸ்காவை அனுசரித்து அதே நேரத்தில், தன்னுடைய சொந்த பந்தியை ஏற்படுத்தும்படியாய் அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் பயன்படுத்தினபடியால், கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவு கூரும்படியாய் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது, புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் இன்றளவும் பயன்படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு தம்முடைய சீஷர்களிடம், தான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப் பழரசத்தை இனி பானம் பண்ணுவதில்லையென்று சொன்னார். இதன் பொருள், இயேசு விரைவில் காட்டிக் கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்துவார் என்பதே. அதன் பிறகு அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று பகல், மூன்று இரவுகளுக்குப் பிறகு கல்லறையிலிருந்து எழுந்து, சீஷர் களுக்கும் வேறு சிலருக்கும் தரிசனமாகி, பின்பு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் இயேசு திரும்பிச் செல்வார். தேவனுடைய ராஜ்யம்

அல்லது சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டு, அங்கே இருந்து உலகம் முழுவதிற்கும் பரம்பும். சபை ஏற்படுத்தப்பட்டவுடனேயே நாம் இப்படி வாசிக்கிறதை தயவு செய்து கவனியுங்கள். "*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந் தார்கள்*" (அப். 2:42). இங்கே அப்பம் பிட்குதல் என்பது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதைத்தான் குறிக்கிறது. கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் வரவிருக்கின்ற ராஜ்யம் அல்லது சபையின் பந்தியில் பங்கு பெறும்போது, அவர்களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். நிச்சயமாகவே, இயேசு அப்போது தான் சரீரப் பிரகாரமாக அவர்களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்யவில்லை; ஆனால், அவர்களோடு இருந்தார், இன்றும் அவர் ஆவியில் தம்முடைய ஜனங்க ளோடு இருக்கிறார். இரண்டு பேராவது, மூன்று பேராவது அவரு டைய நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருப்பதாக இயேசு சொன்னார் (மத். 18:20). மறுபடியும், நம்முடைய மரணபரியந்தம் நம்மோடிருப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத். 28:20). ஆகையால், சபை இருக்கிறது. கர்த்தரு டைய மக்களாக நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது இயேசு நம்மோடிருக்கிறார்.

இப்போது என்னோடு I கொரி. 11:23-29 வசனங்களுக்கு திருப்பிக் கொள்ளுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தை களை நாம் வாசிப்போம். "*நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரி டத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயி ருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதேல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தை புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தை யும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷ னும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திர மாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்ன தென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்*".

மேலே உள்ள வசனப்பகுதியில், நாம் விசேஷமாக கவனம் செலுத்த வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. முதலாவது, பவுல் தான் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட செய்தியை கொரிந்து

பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு ஒப்புவித்ததாக சொன்னார். இரண்டாவதாக, கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரும்படி அப்பத்தைப் புசிக்க வேண்டுமென்றும், கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்றார். ஏனென்றால், கிறிஸ்துவின் இரத்தம், கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது புதிய ஏற்பாட்டை உறுதி செய்யும்படியாக சிந்தப்பட்டது. மூன்றாவதாக, எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறார்களோ, அப்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி என்பதின் பொருள் என்ன? அப். 20:7-ல் பவுல் அப்பம் பிட்கும், நோக்கத்திற்காக துரோவாவில் கிறிஸ்தவர்களோடு கூடின உதாரணம் நமக்கு இருக்கிறது. வாரத்தின் முதல் நாள் என்பது எத்தனை நாட்களுக்கு ஒருமுறை வருகிறது? வாரத்திற்கு ஒருமுறை. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்திற்கு ஒரு முறை கூடியிருக்கிறார்கள். இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உண்மை பொருந்துகிறதாகவே இருக்கிறது. நாம் வியாழக்கிழமைகளிலோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒருமுறையோ சபையாகக் கூடி வருவதற்கு நமக்கு அதிகாரமில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக வாரத்தின் முதல் நாளில் கூடினார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் என்று இருக்கிறபடியால் கிறிஸ்துவை நினைவு கூரும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறும்படி கூடி வந்திருக்கிறார்கள். நாம் அவர்களுடைய மாதிரியை பின்பற்றுகிறவர்களாக இருந்தால் இன்னும் நாம் அதே காரியத்தைப் பின்பற்ற வேண்டும்.

நான்காவதாக, கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கேற்கும் போது, நாம் இரட்சிக்கப்படும்படியாகவும், நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெறும்படியாகவும் தியாகங்கள் செய்த இயேசுவை நினைவு கூரும்படி அந்த சிலுவையைத் திரும்பி பார்க்கிறோம். நாம் அப்பம் பிட்கும் போது நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்றும் அவர் மீண்டும் வருவார் என்பதைத் தெரிவிப்பவர்களாகவும் இருக்கிறோம்.

ஐந்தாவதாக, நாம் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால் அதாவது, கர்த்தருக்கு உண்மையில்லாதவர்களாயிருந்து, நாம் செய்கிறவைகளில் நேர்மையில்லாதவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் தவறாகப் பயன்படுத்திய குற்றவாளிகளாயிருப்போம். வேறுவிதமாகச் சொன்னால், நாம் அபாத்திரமாய்க் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால் நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்கிறோம். அதன் பொருள், நாம் பந்தியில் பங்கேற்கும் முன்பு பூரணமாயிருக்க வேண்டும் என்பதல்ல.

ஆனால், கர்த்தருடைய பந்தி நமக்கும், கர்த்தருக்கும் சரியானதாக இருக்க வேண்டுமானால் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

ஆறாவதும் கடைசியுமாக, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு, நம்மை நாமே சோதித்தறிவது மிகவும் முக்கியம். இதன் மூலம் நம் இருதயமும், வாழ்க்கையும் தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். நம்மால் முடிந்தவரை, நாம் சிறந்ததை செய்கிறோம் என்று அறியும் போது தான், நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாலிருக்கிறோம் என்று பொருள்படும். அப்போது தான், நாம் பந்தியில் பங்கு பெற வேண்டும். கர்த்தர் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறாரோ அதை அடிப்படையாக வைத்து நாம் அவருக்கு உண்மையாயிருக்கிறோம் என்று நேர்மையான இருதயத்தோடு சொல்ல முடியாவிட்டால், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தொடர்ந்து வாரந் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது? நீங்கள் கர்த்தருடைய ஜனங்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் ஒரு கிறிஸ்தவ ராகும்படி உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம். அதை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதினால் செய்ய முடியும் (மாற்கு 16:16; அப். 2:38). ஒரு கிறிஸ்தவனாக கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டு, வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறலாம். இதன் மூலம் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உறுதி செய்து கொள்ள முடியும்; மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உலகிற்குப் பறைசாற்றவும் முடியும்.

## நாளும், நடப்பும்

1. கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றிலும் 7 கி.மீட்டருக்கு தடையுத்திரவு.
2. ஐ.ஏ.எஸ். தேர்வை தமிழில் எழுத கட்டுப்பாடு.
3. இந்திய மருத்துவக் கவுன்சில் திருத்தியமைக்கப்படுகிறது.
4. தமிழர்களின் உணர்வை மதித்து மத்திய அரசு செயல்படும் - வாசன்
5. இந்தியாவின் யோசனையை நிராகரித்தது இலங்கை
6. இந்தியா - பாகிஸ்தான் பேச்சு ஒரு நாள் விவகாரமல்ல -வெளியுறவு அமைச்சர்.

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவப் பெண்ணின் ஆவிக்குரிய நிலை

Sis. RACHEAL NAYAGAM

ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் வாழ்க்கையானது, அவள் பிறருக்கு செய்யும் சேவையின் மூலம் அறியப்படுகிறது. இது ஒரு நல்ல காரியம் ஏனென்றால், இயற்கையாகவே இவள், மற்றவர்களுடைய தேவைகளை உணர்ந்து கொள்ள கூடிய உள்ளுணர்வுகளைப் பெற்றிருக்கிறாள். பிறருடைய தேவைகளுக்காக தன்னை அர்ப்பணிக்கும் முன், முதலாவது தனக்குள் சென்று தன்னை யார் என்று அவள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை சரியான மனப் பான்மையோடு இவள் பிறருக்கு உதவவில்லை என்றால், அவள் செலவிடும் நேரமும், பிரயாசங்களும் தேவனுக்கென்றும், அவருடைய ராஜ்யமாகிய சபைக்கென்றும் செய்யப்படும் ஒன்றாக இல்லாமல், எரிச்சலோடும், கோபத்தோடும் செய்யப்படும் ஒன்றாக அவளுக்கு இருக்கும். அவளுடைய ஆவிக்குரிய நிலை தேவனோடு சேர்ந்து ஒத்துப் போகக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் மிகவும் சுலபமாக வெளிப்புறக் காரியங்களை அவள் நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியும். இதை அங்கீகரிக்கும் விதமாக ஞானி சாலமோனின் நீதி மொழிகளில் நாம் வாசிக்கும் போது, "அவன் இருதயத்தின் பானம் பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது" (நீதி. 23:7) என்று பார்க்கிறோம்.

ஒரு பெண் அன்றாடம் - பிறருக்கு செய்யும் உதவியை, ஒரு கூஜாவில் இருக்கும் தண்ணீரை ஒரு டம்ளரில் ஊற்றும் செயலுக்கு ஒப்பிட்டுக் கூறலாம். மற்றவரின் ஆவிக்குரிய தேவைகளுக்காக தன்னை கொடுக்கும் ஒவ்வொரு முறையும், தன்னுடைய சொந்த கூஜாவில் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறாள். உடனே அந்த காலி இடத்தை அவள் நிரப்பிக் கொள்ளாவிட்டால் ஆவிக்குரிய வெற்றிடம் ஏற்பட்டுவிடும். ஆவிக்குரிய காரியங்களில் தன் நிலையை ஆழப்படுத்திக் கொள்வது ஒரு கிறிஸ்தவப் பெண் தொடர்ந்து செய்ய வேண்டிய முக்கிய வேலை ஆகும்.

### ஆவிக்குரிய நிலை என்றால் என்ன?

பொதுவாக நாம் அனைவருமே தேறின ஆவிக்குரியவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவோம். இதன் பொருள் சிந்தனையிலும், போதனையிலும், வாழ்க்கையிலும், தோற்றத்திலும் ஆவிக்குரிய குணத்தை பிரதிபலிப்பது என்று கூறலாம். இன்னும், மாம்சத்தின்

உடமைகளுக்கு அதிக முக்கியம் கொடுக்காமல் ஆவிக்குரிய காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது என்றும் வரையறுக்கலாம். வேதாகமம் இதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறதென்று பார்க்கலாம்.

“ **அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம்** ” (ரோமர் *8:5,6*) இரண்டு வேறுபட்ட காரியங்கள் நம்மைச் சுற்றி வருகிறது. ஒன்று நம்முடைய ஆன்மா. அடுத்தது சரீரம். சரீரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் மாம்ச சிந்தை நம்மை சுற்றிக்கொள்ளும். அதை விடுத்து தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் போது ஆவிக்குரிய நிலையை எய்த வாய்ப்பு ஏற்படுகிறது.

சரி, இந்த ஆவிக்குரிய நிலையை நாம் அடைய நம்மை எவ்வாறு தயார்படுத்துவது பற்றி மூன்று தலைப்புகளின் கீழே ஆராய்ந்து பார்ப்போம்.

**சரியான சமநிலையில் நம்மை வைத்துக் கொள்வது**

உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை மேற்கொள்ள ஏதோ துறவியாக மாற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. அது அவருடைய விருப்பமும் அல்ல. உலக காரியங்களுக்கும் நேரத்தை ஒதுக்குதல் அவசியம். நீதி. *31* ஆம் அதிகாரத்தில் பார்க்கும் குணசாலியான ஸ்திரீ வீட்டுக் காரியங்களை கவனித்து சோம்பலின் அப்பத்தை புசியாமல் இருந்தாள் என்று வாசிக்கிறோம். மார்த்தாளைப் போன்று உலக காரியங்களுக்காகவே கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. தன் செயலை நியாயப்படுத்த முயன்ற மார்த்தாள் இயேசுவையே கேள்வி கேட்கிறாள். **என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக்குறித்து உமக்கு கவலையில்லையா?** என்று. (லூக். *10:40*) இயேசுவின் நிதானமான, ஆனால், கருத்தாழமிக்க பதில் என்னவென்றால் “**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்** ” என்றார் (லுக். *10:42*). அதிக நேரத்தை செலவு செய்து செய்யும் உலகக் காரியங்கள் நம்மை விட்டு எடுபட்டுப் போய்விடும். ஆவிக்குரிய செயல்கள் ஆனால், என்றும் நிலைத்து இருக்கும். மார்த்தாள் செய்கையில் தவறேதுமில்லை. விருந்தோம்பல் ஒரு பெண்ணுக்கே உண்டான நல்ல குணம் தான். ஆனால், அதுவே அவளை மேற்கொண்டு ஆவிக்குரிய காரியத்துக்கு நேரத்தை ஒதுக்க மனமில்லாமல் செய்துவிட்டது.

விதைக்கிறவன் உவமையில் மூன்றாவது வகையான விதையைப் பற்றிப் பார்க்கும் போது அது பிரச்சனை இல்லாமல் நன்றாகவே வளர்ந்தது. அதை சுற்றிலுமிருக்கிற முள் வளர்ந்து அதை நெருக்கிப் போட்டது. பல சமயங்களில் நம்முடைய சொந்த முட்களான உலகக் கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் இவைகள் ஆவிக்குரிய வளர்ச்சியை நசுக்கிப் போடுகின்றன. (மத். *13:22*) நல்லவைகள், சிறந்தவைகள்

ஆகிய இரண்டுக்குமுள்ள வேறு பாட்டை உணர்ந்து சிறந்த தான ஆவிக்குரிய காரியங்களை "**ஆம்**" என்று ஏற்றுக்கொண்டு உலகக் காரியங் களுக்கு "**இல்லை**" என்ற சொல்லை பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட வேத வாசிப்பு, தியானம், ஜெபம், ஆராதனை, வேதபாட வகுப்பு இவைகளில் நம்மை ஈடுபடுத்தும் போது ஆவிக்குரிய வகையில் வளர முடியும்.

**நேரத்தைக் கண்டுபிடித்து ஒதுக்குவது :**

பொதுவாக நாம் அனை வருமே ஆவிக்குரிய காரியங் களில் வளர்ந்து மேம்பாட டைய விரும்புவோம். உலக காரியங் களோ நம்மை விடாமல் தாக்கி நம்முடைய கவனத்தை சிதறடிக் கச் செய்யும். இதை ஜாக்கிரதை யாய் மேற்கொண்டு நம்மை ஆவிக்குரியவர்களாக காத்துக் கொள்ள வேண்டும். அப்போஸ்த லனாகிய பவுல் தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு கூறும் போது "**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**" (தெச. 5:17) என்று சொன்னது போல் நம்முடைய வேலைகளினூடே நேரத்தை கண்டுபிடித்து ஜெபித்துக் கொண் டேயிருக்க வேண்டும். ஓயாமல் ஜெபம் பண்ணும் பழக்கத்தை தானியேல் கொண்டி ருந்தான். "**தானியேலோவென்றால் ... தன் வீட்டுக்குள்ளே போய், தன்மேல் அறையிலே எருச லேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங் காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத் தினான்** (தானி. 6:10).

தன்னை பின்பற்றினவர் களுக்கு இயேசு கிறிஸ்து ஒரு மாதிரி ஜெபம் செய்து காட்டி னார். (மத். 6:9-13) அந்த ஜெபம் ஏழு பாகங்களைக் கொண்டுள்ளது

**1. துதித்தல்**

"***பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக***". அநேக சமயங்களில் நாம் தேவனை துதிக்க மறந்து விடுகிறோம். நாம் அற்ப மனுஷர்களாயிருப்பதால் தேவாதி தேவனின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டு அவருடைய மகத்துவம் பற்றிய வசனப் பகுதி களை படித்து ஜெபத்தில் அவற்றை பயன்படுத்தித் துதிக்க வேண்டும்.

**2. சபை :**

"***உம்முடைய இராஜ்யம் வருவதாக***" இயேசு இந்த மாதிரி ஜெபத்தை கற்றுக் கொடுக்கும் போது இராஜ்யமாகிய சபை ஸ்தாபிக்கப்படாமல் இருந்தது. பெந்தேகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு இந்த மாதிரி வார்த்தையை நாம் உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**3. அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிவது**

"***உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக***" மனிதர் களாகிய நமக்கு சில சமயங்களில் முற்றிலுமாக பிதாவின் சித்தத் துக்கு ஒப்புக்கொடுப்பதில் பிரச்சனை இருந்து கொண்டே உள்ளது. முற்றிலும் அவர் சித்தம் செய்யாத பாத்திரமாக நாம் இருக்கும் பட்சத்தில் அவருக்கு

முழுமையான மகிமையை கொடுக்கிறவர்களாக நாம் காணப்படமாட்டோம்.

**4. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும் :**

இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், இயேசு வானவர் தன் சீடர்களிடம் அவர்களுக்கு வேண்டிய உணவை ஒரு மாதத்திற்கோ, அல்லது ஒரு வருடம் முடியுமட்டோ கொடுக்கும்படி ஜெபிக்கச் சொல்லவில்லை. மாறாக, அன்றாடத் தேவைக்கு மட்டும் கேட்டு ஜெபிக்கச் சொல்கிறார்.

**5. மன்னிப்பு**

**"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்".** ஒரு கிறிஸ்தவன் தான் செய்த தவறை அறிக்கை செய்தாலொழிய மன்னிப்பைப் பெற முடியாது. நமக்கு விரோதமாய் தவறு செய்தவர்களையும் மன்னிக்க வேண்டும். மன்னிக்கும் இருதயம் மிக, மிக முக்கியம்.

**6. பலவீனங்களில் உதவி**

**"எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்".**

சாத்தானுடைய வலையில் விழத்தள்ளக் கூடிய பலவித பலவீனங்களை நாம் கொண்டிருக்கிறோம். எனவே, தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கும் போது குறிப்பாக பலவீனங்களைச் சொல்லி, பெலனுக்காக ஜெபிக்க வேண்டும்.

**7. துதித்தல் :**

**ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே**

இயேசுவின் மாதிரி ஜெபம் துவக்கமும், முடிவும் துதித்தலை கொண்டுள்ளது.

இதோடு நிறுத்திக் கொள்ளாமல் கிறிஸ்தவப் பெண்களாகிய நமக்கு இன்னும் ஜெபிப்பதற்கு பல காரியங்கள் உண்டு. தேவையில் இருப்போர், வியாதியாய் இருப்போர் என்று பட்டியலிடலாம். அதிகாலையில் வேலை செய்யும் போது அவரைத் துதிக்கலாம். பகல் வேளையில் வேலைகளுக்கிடையே சபைக்காகவும், ஜெபிக்கச் சொல்லி கேட்டவர்களுக்காகவும் ஜெபிக்கலாம். மன்னிப்பு கேட்டு இடைவிடாமல் ஜெபிக்கலாம். இரவு படுக்கும் முன் ஜெபிக்கலாம் என்று காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. முழங்காலில் நின்று ஜெபித்தால் மிகவும் நல்லது. மனதை ஜெபத்தோடு ஒன்றிப் போகச் செய்வதற்கு முழங்காலில் நிற்பதை விட சிறந்த வழி வேறு எதுவும் இல்லை. தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர் நம் தேவன், சில சமயங்களில் "ஆம்" என்றும் சில நேரங்களில் "இல்லை" என்று பதில் கொடுக்கிறார். நம்முடைய ஜெபத்திற்கு பதில் எத்தன்மையது என்று எப்படி தெரிந்து கொள்ளப் போகிறோம்.

அருமையானவர்களே, வேத வசனங்களின் மூலமாக நமக்கு நம் தேவன் பதில் சொல்கிறவராய் இருக்கிறார். எனவே, வேதத்தைப் படித்து, தியானிப்பது அவசியம்.

வாலிபர் பகுதி

# அந்த நாள்...

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வுலகில் ஒவ்வொருவரும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம்முடைய தேவன் நம்மை இந்த பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் (ஏசாயா 43:7). இப்புவியில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்குக் கொடுக்க வேண்டும். நியாயத்தீர்ப்பின் நாள் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாக இருக்கும். தேவனுடைய பிள்ளைகளுக்கோ அது மகிழ்ச்சியின் நாளாக இருக்கும். இப்போது அந்த நியாயத்தீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை தேவ வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

பிரியமானவர்களே, நாம் வேதாகமத்தில் பார்க்கும் போது, இவ்வுலகில் நாம் செய்த செயல்களுக்காக நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்கிற உண்மையை விட தெளிவாக எந்த ஒரு உண்மையும் வேதாகமத்தில் போதிக்கப்படவில்லை. II கொரி. 5:10-ல். ஏனெனில், " சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் ". ஆனால், இன்றைய நாட்களில் அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத் தீர்ப்பு என்று ஒன்றுமே இல்லை. நாம் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்கிற முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது (பிரசங்கி 11:9) சாலொமோன் ஞானி சொல்லும் போது "வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி" என்று சொல்கிறார். இந்த உலகத்தில் எத்தனையோ நிகழ்வுகள் நிகழ்ந்தாலும், நியாயத் தீர்ப்பு நாளைப்போல பயங்கரமான நாள் ஒன்றுமே இல்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் இவ்வுலகில் வாழும் போது தீமையை விட்டு விலகி கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக் குறித்து பயப்படாமல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

நாம் வாழும் இவ்வுலகில் வேத வசனங்களின்படி நடக்கவில்லை யென்றால் நியாயத் தீர்ப்பு நாளிலே நாம் தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும். இவ்வுலகில் நாம் வாழும் நாட்கள் நாம் நம்முடைய நித்தியத்தைத் தெரிந்தெடுப்பதற்காக தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் நித்தியத்தை எங்கே கழிப்ப தென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. இப்போது வேதாகமத்திலிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத் தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்று வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

**I. தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால் ....**

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக் கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை நமக்கு வெளிப்படுத்து கிறது (எபே. *3:1-3*). தேவனுடைய சத்தியத்தை அறியாமல் மரித்தால் நித்திய நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. “சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்று இயேசு சொன்னார் (யோவான் *8:32*). அந்தக் கடைசி மகாபெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் (யோ. *12:48*). நம்முடைய நாட்களில் வேதவசனங்கள் பத்திரிக்கை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலம் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே, நாங்கள் வேத வசனங்களை கேட்டதே இல்லை என்று யாருமே சாக்குப்போக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங் களைக் கேட்டிராவிட்டாலும், தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர் உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். அவர் களும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களைப் படிக்க வேண்டும் (II தீமோ. *2:15*). அதே போல் நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப் பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப் போதகர் களால் வஞ்சிக்கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்திருக்கிறார் (மத். *7:15-20*). மேலும், இயேசு குருடனுக்குக் குருடன் வழி காட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்று எச்சரித்தார் (மத். *15:14*). அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர் களுக்கு எழுதும் போது, “ பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்

*கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவி களையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' (I யோவான் 4:1).*

## II. கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்

*சத்தியத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பு இருந்தும் அதைத் தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம் பதில் என்னவாயிருக்கும்? (ரோமர் 2:8,9; எபி. 2:1-3) ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது முக்கிய மானது; ஒரு மனிதன் பெரிய வீட்டில் இருப்பது, அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பது எல்லாம் இரட்சிப் புக்கும், நித்தியஜீவனுக்கும் உதவாது. ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருந் தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அது மாத்திரமல்ல கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக் கின்றன (எபே. 1:3).*

*சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் இருப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது ரோமர் 6:3,4-ல் நாம் வாசிக்கும் போது, "கிறிஸ்து இயேசுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித் தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர் களாக நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக் கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம் ". " மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ்நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் வர முடியும். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகி றோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந் தால் இந்த உலகம் ஒரு வித்தியாசமான உலகமாக இருக்கும். II கொரி. 5:17ல் நாம் வாசிக்கும் போது " ஒருவன் கிறிஸ்வுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே, இதுவரை நாம் உலகப் பிரகாரமான காரியங்களில் நம்மை மூழ்கடித் திருந்தாலும் பரவாயில்லை, இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து, ஒரு புதிய மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங் களைப் போல் பிரகாசிப்போம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக ஆமென்!.*

**வாலிபப் பிரயாத்தின் உன் சிருஷ்டிகரை நினை**

# தன்னடக்கம் (SELF CONTROL)

Bro. V. தானியேல் துரைராஜ்

“தன்னை அடக்காதவன் எவனும் உண்மையான சுதந்தரவாளி யில்லை” என்று பித்தகோரஸ் என்பவர் சொல்லுகிறார்.

இந்தக் கால கட்டத்தில் மனித சமுதாயத்திற்கு மிகவும் தேவையானது, இந்தத் “தன்னடக்கம்” (Self Control) தன்னடக்க மில்லாமல் சமுதாயத்தில் நல்ல நிகழ்வுகளை எதிர்ப்பார்ப்பது கூடாத காரியம். தன்னடக்கமில்லாமையினால் அன்றாடம் நிகழும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

“ஜான் மில்டன்” என்ற ஆங்கில கவிஞன் பாடிய பாடலில், “தன்னை தானே அடக்கி, தன் உணர்வுகளையும், பயத்தையும், ஆசைகளையும் கட்டுபடுத்துபவன். ஒரு ராஜாவை விட மேலானவன்” என்கிறார்.

தன்னடக்கத்தினால் மனம், சரீரம், ஆத்துமா ஆரோக்கிய மடைந்து புது பெலனடைகிறது. நாமனைவரும் ஒன்றை அடைய வேண்டுமென்றும், ஒன்றை சாதிக்க வேண்டுமென்ற வேட்கையோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், வெகு சிலரே வெற்றிக்கு அடிப்படையாக இருக்கின்ற தன்னடக்கத்தை முன்னிறுத்தி பிரயாசப் படுகின்றனர்.

சிலர், தன்னடக்கமென்பது நம்முடைய நாகரீகத்திற்கு தக்கபடி விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் அல்லது விருப்பமில்லை யென்றால் அதை விட்டு விடலாம் என்று எண்ணுகின்றனர். ஆனால், அது தவறு.

பரிசுத்த வேதாகமம் துவக்க முதல் முடிவு வரை இந்த தன்னடக்கத்தை வலியுறுத்துகிறது. ஏவாள் தன்னை பிசாசின் சூழ்ச்சிக்கு பலியாக்கினாள் (ஆதி. 3 ஆம் அதிகாரம்) 2பேதுரு 1:5,6ல் விசுவாசம் இச்சை யடக்கத்தோடே இருந்தால் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நம்மை வீணரும் கனியற்றவர்களாகவும் ஆக்கிவிடாது என்று பேதுரு சொல்கிறார். ஆவியின் கனிகளிலே ஒன்று இந்த தன்னடக்கம் (கலா. 5:23). தானியேல் தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்தில் இருந்தபொழுது, “ராஜாவின் போஜனத்தினாலும், மதுபானத்தினா லும், தன்னை தீட்டு படுத்தமாட்டேன் என்று இருதயத்தில் உறுதியாய் தீர்மானித்தான்” (தானி. 1:8) என்று சொல்லப்பட்டிருக்கிறது. விளைவு தேவன், தானியேலை பாதுகாத்தார் (தானி. 1:9,21). ரேகாபின் குமாரன் யோனதாப்தன் புத்திரருக்கு கட்டளையிட்டதை இன்று வரை கைக் கொண்டு வருகின்றனராம் (ஏரே. 35:6,7,14). அப்போஸ்தலன் பவுல் கூட, “....மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நான் ஆகாதவனாய் போய் விடாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்” என்கின்றார் (1 கொரி. 9:27).

**I தன்னடக்கமில்லாத வாழ்வின் அடையாளங்கள்**

***1. துவக்குவார்கள் ஆனால் முடிக்க மாட்டார்கள்.*** லூக். 8:14ல் இயேசு சொன்னார். "…. உலகக் கவலைகளினாலும், ஐசுவரியத்தி னாலும், சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு பலன் கொடாதே போகிறான்.

***2. எதையும் தள்ளிபோடும் மனப்பான்மை :*** நாளை பார்ப்போம், எல்லாச் சூழ்நிலைகளும் நன்றாக வந்தால் உண்டு இல்லையென்றால் பார்ப்போம் என்னும் மனநிலை.

***3. நேரம் தவறுதல் :*** எந்த காரியத்திற்கும், சரியான நேரத்திற்கு வருவதேயில்லை. அவர்களுக்கு போதுமான கால அவகாசம் கொடுத் திருந்தும் ஞானமாய் அதைக் கையாளாமை. அடுத்தவர்கள் அவர் களுக்காக காத்துக் கொண்டிருப்பது பற்றி கவலைப்படுவதே கிடையாது.

***4. கெட்ட பழக்கங்கள், பழக்கத்திற்கு அடிமைகள் :***

மது குடிப்பது, புகை பிடிப்பது, பெருந்தீனி பணத்தை சரியாக கையாளாமை. இப்படி எத்தனையோ கெட்ட பழக்கங்களை திரளாய் உன் வாழ்வில் கொண்டுவரும் ஜாக்கிரதை! வேண்டாத பேச்சுக்கள், கோபம், சோம்பேறித்தனம் ஆகியவையும் இதிலடங்கும் *(எபேசி. 4:26; நீதி. 20:4).*

**II எவ்வாறு இந்த தன்னடக்கதைப் பெறுவது?**

***தினந்தோறும் தன்னை வெறுத்து, தன் சிலுவையை எடுக்க வேண்டும் (மத். 16:24).***

பவுல் சொல்லுகிறார் அனுதினமும் நான் அவரோடு சிலுவையில் அறையப்படுகிறேன் என்று, பாவத்திற்கும், சுயத்திற்கும் அனுதினமும் மரித்தல் வேண்டும் *(கலா. 2:20; கலா. 6:14).*

***2. அடுத்ததாக, ஜெபம் கண்டிப்பாக தேவை :*** தேவனுடைய சித்தத்தின்படி நாம் வாழ அவர் நமக்கு ஞானத்தைக் கொடுக்கும் படியும், நாம் அவருடைய வசனங்களை நம்முடைய வாழ்க்கையில் சரியாகப் பொருத்தி வாழும் வகைதனைக் கற்றுத் தரும்படியாகவும் ஜெபித்தல் வேண்டும் *(யாக். 1:5).*

***3. அவருடைய பெலத்தையே சார்ந்து ஜீவித்தல் வேண்டும் (நீதி. 3:1-6).*** கட்டளைகளை உள்ளத்தில் காத்துக் கொண்டால், நீடித்த நாட்கள் (Long Life), தீர்க்காயுசு. (எல்லாவற்றிலும் நீ வெற்றியாளனா யிருப்பாய்) என்று ஆங்கில மொழியாக்கம் சொல்லுகிறது. சமாதானம் பெருகும்.

*உன் சுயபுத்தியின் மேல் சாயாதே! முழு இருதயத்தோடும், தேவனுடைய சித்தத்தில் பலப்படு; அவர் உன் பாதைகளை செவ்வை பண்ணுவார். " பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் " (நீதி. 16:32).*

# தேவத்துவம்

(From - TRUTH FOR THE WORLD)

மனிதன் தேவனை அறிந்த காலந்தொட்டு, தேவன் யார் என்பது சம்பந்தமாக சில குழப்பங்கள் இருந்து வருகிறது. இந்தக் குழப்பங்கள் தேவன் பற்றியும், அவருடைய தன்மை பற்றியும், உபதேசிக்கப்படும் கள்ள உபதேசங்களிலிருந்து தான் வருகிறது. நாம் வேதாகமத்தை முழுமையான அளவில் வாசிக்கும்போது, தேவன் யார் என்பதையும், அவர் எவைகளை உள்ளடக்கியிருக்கிறார் என்பதையும் தெளிவாகக் காண முடியும்.

தேவன் யார்? தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தின் முதல் வசனத்தில், இதற்கான பதில் நாம் பார்க்கிறோம் (ஆதி. 1:1). "*ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்*" என்று சொல்கிறது. இங்கே தேவன் சிருஷ்டிகராயிருக்கிறார் என்பதை நாம் காண்கிறோம். இது தேவன் சர்வவல்லமையுள்ளவர் மற்றும் மகத்துவ முள்ளவர் என்கிற கருத்தை நமக்குக் கொடுக்கிறது.

இப்போது, தேவனைப் பற்றிய சில முக்கியமான உண்மைகளை நாம் ஆழ்ந்து கவனிப்போம். அவர் நித்தியமானவர்; அதன் பொருள் அவர் ஆரம்பமும், முடிவும் இல்லாதவர் (சங். 90:2). அவர் சர்வ வல்லமையுள்ளவர், அந்த வல்லமையினாலே இவ்வுலகத்தையும், நம்மையும் உருவாக்கியிருக்கிறார்! அவர் எல்லாம் அறிந்தவராயிருக் கிறார். அவருடைய கண்களுக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை (நீதி. 5:21; 1 யோவான் 3:20). அவர் எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கிறார் (சங். 139:7-10; 2 நாளா 16:9). அவர் பூரண ராயிருக்கிறார், அவர் பாவம் செய்வதில்லை (1 யோவான் 1:5). அவர் மாறாதவராயிருக்கிறார், என்றென்றும் இருக்கிற வண்ணமாகவே இருப்பார். (மல்கியா 3:6; எபி. 13:8). அவர் மாம்சத்தை உடைய வரல்ல, அவர் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24; லூக்கா 24:39). நீங்களும், நானும் சேவிக்கிற தேவன் இவர்தான்.

தேவன் ஒருவரே என்பதை உணர்ந்து கொள்வது முக்கியமாக இருக்கிறது! ஏசாயா 44:6 இவ்விதமாகச் சொல்கிறது, " நான் முந்தின வரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லை யென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்த ராகிய அவருடைய மீட்பரும் சொல்லுகிறார் ". தேவனோ ஒருவர் என்று கலா. 3:20 சொல்கிறது. மாற்கு 12:32ல் அதற்கு வேத பாரகன்; சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை என்று சொல்கிறது. ஒரே ஒரு தேவன் தான் உண்டு என்பதை வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது (யாக். 2:19; ரோமர் 3:30).

தேவன் ஒருவர் தான் என்றால் அந்த தேவனைக் குறிப்பிடுவதற்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று ஏன் வேதாகமத்தில் வாசிக்கிறோம்? இப்படியாக வேதாகமத்தில் குறிப்பிடப்படுவதால்,

இங்கு தான் ஒருவன் தேவத்துவம் என்பதைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

தேவனைப் பின்பற்றுபவர்களாகிய நாம், தேவன் ஒருவர் என்று போதிக்கிற அதே வேதாகமம் தான் தேவனுக்கு வித்தியாசமான ஆள்தத்துவங்கள் உண்டு என்றும் போதிக்கிறதென்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும். ஆதி. 1:26ல் "தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொன்னார். இங்கே தேவனுடைய வார்த்தை, தேவன் தம்மை "நமது" "நாம்" என்று குறிப்பிடுவதை மேற்கோள் காட்டுகிறது. இந்த வசனமும், வேறு சில வசனங் களும் தேவன் ஒருவராக இருந்தாலும், அவருக்கு மூன்று வேறுபட்ட ஆள்தத்துவங்கள் இருப்பதை காட்டுகின்றன. இந்த ஆள்தத்துவங்கள் செயல் பாட்டில் வித்தியாசமாக இருந்தாலும், எண்ணத்திலும், நோக்கத்திலும் ஒன்றாகவே இருக்கிறார்கள். அவர்கள் பூரணமான, முழுமையான ஒரே தேவனாக ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறார்கள்!.

கீழ்க்காணும் வசனங்களில், வேறுபட்ட ஆள்தத்துவங்களை நாம் கவனிப்போம். எபேசியர் 4:6ல் பவுல், "*எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்*" என்று சொன்னார். இங்கே பவுல், "பிதாவாக" அறியப்பட்டிருக்கிற ஒரே தேவனைக் குறிப்பிடுகிறார். மத். 1:23ல் "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவளுக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் " தேவன் நம்மோடிருக் கிறார் என்று அர்த்தமாம் " என்று சொல்லுகிறது. யோவான் 3:16ல் தேவன் "குமாரன்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார். இறுதியாக அப். 5:3-4 வசனங்களில், தேவனுடைய கடைசி ஆள்தத்துவத்தை நாம் காண முடியும்; "பேதுரு அவனை நோக்கி; அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்கு முன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்" என்றான். இங்கே பேதுரு அனனியாவிடம் மனுஷரிடத்தில் அல்ல, " பரிசுத்த ஆவியாகிய " தேவனிடத்தில் பொய் சொன்னதாக சொல்கிறார். இந்த மூன்று ஆள்தத்துவங்களும் ஒரு தேவத்துவத்தை உருவாக்குகின்றன.

உதாரணமாக, நாம் மறுபடியும் ஆதியாகமம், ஒன்றாம் அதிகாரத்தை பார்ப்போம். அங்கே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கினது பற்றி நாம் வாசிக்கிறோம். தேவன் " நமது சாயலாக வும், நமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக " என்று சொல்கிற இருபத்தி ஆறாம் வசனத்தை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். " சிருஷ்டிப்பில் தேவத்துவம் எப்படி இருந்தது என்பதை நாம் இங்கே பார்ப்போம். இரண்டாம் வசனத்தில் "பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் " என்று வாசிக்கிறோம். இங்கே தேவ ஆவியானவர்

ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்ததை கவனியுங்கள். கொலோ. 1:14-17 வசனங்களில் நாம் (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக் கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங் களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது என்று பார்க்கிறோம். இங்கே சகலமும் கிறிஸ்துவைக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டது, அதாவது தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்துவைக் கொண்டு சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது என்று வாசிக்கிறோம். யோவான் 1:1-4,14 வசனங்களையும் சேர்த்து வாசியுங்கள்.

தேவனுடைய குமாரனும் தேவனென்றும், அவருடைய ஆவியானவரும் தேவனென்று விசுவாசிப்பது அவ்வளவு கடின மானதா? மனிதர்களாகிய நமக்கு குடும்பப் பெயர் கொடுக்கப்படுவ தில்லையா? ஒருவருடைய தகப்பன் ஜான்ஸ்மித் என்று அழைக்கப் பட்டால் அவருடைய மகனும் ஸ்மித் என்று அழைக்கப்பட முடியும். மகனுடைய முதல் பெயர் வேறு எதுவாக இருந்தாலும், ஸ்மித் என்னும் குடும்பப் பெயர் அங்கே ஓங்கி நிற்கும். அவர்கள் இருவரும் வெவ்வேறு நபர்களாக, தனித்துவம் வாய்ந்தவர்களாக இருந்தாலும், இருவரும் " ஸ்மித் " களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றிணைந்த ஒரே குடும்பமாக ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்.

தேவத்துவத்தைப் புரிந்து கொள்வதில் நமக்கு ஏற்படுகின்ற கடினத்திற்கான காரணம், அதை நாம் சரீரப்பிரகாரமான கண்ணோட் டத்தில் புரிந்து கொள்ள முயற்சிப்பதுதான். தேவன் மாம்சத்திற் குரியவர் அல்ல, அவர் ஆவிக்குரியவராயிருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிருஷ்டிக்கப்பட்டுள்ள எல்லா வற்றையும் அவேர சிருஷ்டித்தார். ஆகவே, அவர் வானத்தை யும், பூமியையும் சிருஷ்டிப்பதற்கு முன்பு ஒன்றுமே இல்லாதிருந்தது. ஏசாயா 55:8,9 வசனங்களில், " என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்கிறார் ". பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது என்று வாசிக்கிறோம். நாம் தேவனல்ல. எனவே, அவரைப் போல் சிந்திப்பது நமக்குக் கூடாத காரியம். அத்தனை வல்லமையையும், மகத்துவத்தையும் உள்ளடக்கிய தேவனை நாம் ஏன் கேள்வி கேட்க வேண்டும்? தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக, தம்மைப் பற்றி நமக்கு எவ்வகையாகப் போதித்திருக்கிறாரோ அந்த வழியில் அவரை நாம் ஏற்றுக் கொள்ளத்தக்க விசுவாசம் உடையவர்களாயிருப்போம் (எபி. 11:6; யோவான் 8:24; மாற்கு 16:16).

# எதை அறிக்கையிடுகிறாய்?

Bro. K. பாண்டியன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் உண்டாவதாக. கிறிஸ்தவ மார்க்கம் ஓர் அறிக்கையின் மார்க்கமாகும். பெரும்பாலோர் பாவ அறிக்கையே கிறிஸ்தவத்தின் அறிக்கை என்று தப்பான எண்ணங் கொண்டிருக்கிறோம். ஆனால், கிறிஸ்துவின் சபையில் பிரவேசிக்கும் போது நாம் இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடு கிறோம் என்பது ஒரு முக்கியமான புதிய ஏற்பாட்டின்படியான அப்போஸ்தலரின் உபதேசமாகும். ஆனால், அதுமாத்திரமல்ல கிறிஸ்தவ வாழ்க்கை! அது ஒரு ஆரம்பம் மட்டுமே. அப்படியானால் தொடர்ந்து நாம் அறிக்கையிட வேண்டியதை அப்போஸ்தலர் உபதேசம் நமக்கு தெளிவுபடுத்தியிருப்பதை இக்கட்டுரையில் பார்க்க தேவன் நமக்கு உதவி செய்வாராக.

*எபிரெய ஆசிரியர் 10:23ன்படி சொல்வது என்ன? நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரா யிருக்கிறாரே!* ஆக, கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கேட்ட வசனத்தின் படியான நம்பிக்கையை, விசேஷமாக தேவன் தம்முடைய பிள்ளை களுக்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நாம் நினைவில் வைத்து வாயில் பேசி நம் நம்பிக்கையை அறிக்கையிட வேண்டும். வேத வசனங்கள் எப்படி நமக்குள் நம்பிக்கையை வளர்க்கிறதோ அதே போல மற்ற காரியங்கள் நமக்குள் அவ நம்பிக்கையை, எதிர்கால பயம் மற்றும் திகில்களை உண்டாக்குகிறது என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வேதத்தின்படி நாம் கேள்விபடு வதினால் விசுவாசம் அல்லது நம்பிக்கை வருகிறது என்று அறிவோம். ஆனால், எதை நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம்? நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர் வேத வசனங்கள் வாரத்திற்கு ஒரே முறை ஆராதனையின் போது மாத்திரமே (வேறே வழியில்லாமல்) கேட்கிறார்கள் என்பது எவ்வளவு வருத்தமான விஷயம்! வருமானத் திற்கும், பொழுதுபோக்கிற்கும் ஒருவர் செலவழிக்கும் நேரமே மிக அதிகமாக இருக்கிறது. *எனக்குப் பிரியமானவர்களே! வேதத்தைக் கேட்க தீவிரமாயிருப்போம், களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சை வைத்து திருப்தியடைய பிரயாசப்படுங்கள்.* வாரத்தின் இடைபட்ட சபை கூட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டு உங்கள் நம்பிக்கை அறிக்கையிடுங்கள்; விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். நாட்கள் பொல்லாதவைகள் ஆனதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.

நம்பிக்கையை அறிக்கையிடுவதில் நமக்கு ஒரு சிறந்த முன்னோடியாய் இருப்பவர் இஸ்ரவேலின் இரண்டாம் அரசன் தாவீது ஆகும். அவன் சிறுவயதிலேயே தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகுத்தறிந்து தனக்கு வெற்றியைத் தருபவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேவனே என்பதில் உறுதியாய் இருந்தான். எனவேதான், கோலியாத் முன்பு, " நீ நிந்தித்த இஸ்ரயேலின் ராணுவங்களின் தேவனுடைய நாமத்தில் நான் வருகிறேன் " என தன் சிறந்த நம்பிக்கையை அறிக்கையிட்டான். நாமும் கூட நமக்கு எதிராய் வரும் கோலியாத் போன்ற பிரச்சனைகளில் சோர்ந்து போகாமல் நம் நம்பிக்கையை அறிக்கையிடப் பழக வேண்டும். தாவீதின் நம்பிக்கைகளை நாம் சங்கீத புஸ்தகங்களில் பிரமிக்கிற அளவுக்குக் காண்கிறோம்; தன் குமாரன் அவனை பகைத்தபோது, " நான் கர்த்தரை கூப்பிட்டேன், அவர் எனக்கு செவி கொடுத்தார். படுத்து நித்திரைக்குப் பின் விழித்துக் கொண்டேன், கர்த்தர் என்னைத் தாங்குகிறார் " (சங். 3:6) எனக்கு விரோதமான பதினாயிரம் பேருக்கும் பயப்படேன் என்கிறான். சிலர் படை பலத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிறார்கள். நானோ கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவேன் என்றும் நான் மரண சூழ்நிலையிலும் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் உமது கோலம், உமது தடியும் என்னைத் தேற்றும் என்று தாவீதின் அறிக்கையை நாம் மறக்க முடியுமா? பல நேரங்களில் விசுவாசிகள் பயத்துக்கும், அச்சத்திற்கும் ஆளாகிறார்கள். அந்த சமயங்களில் எல்லாம் தாவீதின் சங்கீதங்கள் நமக்கு தைரியத்தையும், தெம்பையும் தரவல்லவை. நாம் சந்திக்கிற நெருக்கத்தை, துரோகங்களை விட தாவீது அநேக சங்கடங்களை சந்தித்தான். அப்படிப்பட்ட தாவீது சொல்கிறார்; கர்த்தர் என் வெளிச்சமும், இரட்சிப்புமானவர் யாருக்கு பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்? என்மேல் ஒரு யுத்தம் வந்தாலும் இதிலே நான் நம்பிக்கை யாயிருப்பேன் என்றும், நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையை காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன் என்றும் சங்கீதம் 27ல் அறிக்கையிடுகிறான். தொடர்ந்து நமக்கு அவர் சொல்வதை கவனியுங்கள்: " கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமானதாயி ருந்து கர்த்தருக்கே காத்திரு " என்கிறார். மற்றும் இக்கட்டு காலத்தில் நீதிமான்களுக்கு தேவனே அடைக்கலம் என்றும் கர்த்தர் உதவி செய்து அவர்களை விடுவிப்பார், அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால் அவர்களைத் தப்புவித்து இரட்சிப்பார் என்று சங்கீதம் 37ல் தன் நம்பிக்கையை அறிக்கையிடுகிறார்.

நாமும் கூட நம்முடைய வாழ்க்கையில் பல சூழ்நிலைகளை சந்திக்கிறோம். சோர்வு நம் மனதை தாக்குகிறது. ஆனால், நம் நம்பிக்கையை நாம் தளரவிடாமல், கர்த்தர் உதவி செய்வார், தப்புவிப்பார், நன்மையைக் காண்பேன் என்று நம்முடைய

நம்பிக்கைகளை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாக இருக்க வேண்டும் (எபி. 10:23). வேதம் தெளிவாக சொல்வது; மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம் என்று. நாம் அநேக வேளைகளில் நம்பிகைகையை உறவினர், நண்பர்கள், அதிகாரிகள் போன்ற மனிதர்கள் மீது வைத்து இருதயம் கலக்கமடைகிறோம். நமதாண்டவர் இயேசு சொல்கிறார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமா யிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் (யோவான் 14:1). ஆகவே, நாம் நம் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டியவர்களாயி ருக்கிறோம். நம்முடைய பாரங்கள், கவலைகள், நெருக்கங்கள் இவைகளினின்று நாம் விடுதலையடைய வேண்டுமானால், தேவன் மேலிருக்கும் விசுவாசத்தை ஆபிரகாம் போல, தாவீதைபோல நாம் அறிக்கையிட வேண்டும். ஈசாக்கை பலியிடச் சென்ற ஆபிரகாம் நானும் பிள்ளையாண்டானும் திரும்பி வருவோம் என்று அறிக்கை யிட்டான். தாவீது பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச்சமுத் திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்து பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம் என்றான் (சங். 46:1,3). இப்படி இவர்கள் அறிக்கையிடுகிறதில் உறுதி யாய் இருந்ததினால் தான் தாவீதின் குமாரன் என்று (மத். 1:1) குறிப்பிடுகிறது. சில நேரங்களில் நாம் தாழ்ச்சியையும், நஷ்டத்தையும் அடையும் போது நாம் சோர்ந்து போகாமல், அத்திமரம் துளிர் விடாமல் போனாலும், திராட்சை செடி கனி கொடாமற் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், களிகூருவேன் என்று ஆபகூக் அறிக்கையிட்டதை போல நாம் உறுதியாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உறுதியான அறிக்கை செய்யும் போது, தேவன் நம் பெலனாக இருந்து நம்மை உயர்த்துவார் என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னது நம் அனைவருக்கும் தெரியும். (ரோமர் 10:10) இருதயத்தில் நாம் விசுவாசிக்கும் போது நீதி யுண்டாகிறது. வாயினால் அறிக்கை பண்ணும்போது இரட்சிப்பு விடுதலை கிடைக்கின்றது. எனக்கன் பானவர்களே, ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அவனுக்கு மாத்திரமல்ல நமக்காகவும் அது எழுதப்பட்டிருக்கிறது. ரோமர் 4:23. மாத்திரமல்ல நம் விசுவாசத்தை நாம் அறிக்கையிடும் போதுதான் பிசாசு நம்மை விட்டு விலகுவான். சோதனைகளில் ஜெயம் உண்டாகும் (1யோவான் 5:4,5) நம் வாயின் வார்த்தைகளாலே நாம் நீதிமான் என்றும், குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய் என்று இயேசு சொன்னார் (மத். 12:37). ஆகவே, தேவன் ஏற்கனவே செய்த நன்மைகள் ஏராளம் என்பதை நினைத்துப் பார்ப்போம்; என்றும் மாறாத தேவன் இன்றும் நம்மோடு இருந்து நம்மை ஆசீர்வதிப்பார் என்று அறிக்கையிடுவோம். தேவ சமாதானம் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.



### வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம்-28.

# அபிஷேகம்

**Bro. K. பாஸ்கர்**

**அ**ன்பான வாசகர்ளுக்கு ஆண்வராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. தேவ கிருபையால் இம்மாதத்திலும் உங்களோடு சேர்ந்து இந்தத் தொடர் கட்டுரையை படிக்கும்படி தேவன் அனுக்கிரகம் கொடுத்துள்ளார். அவருக்கே மகிமை உண்டாவதாக! இந்தத் தொடர் கட்டுரையின் நோக்கம் வனசத்தின்படி செயல்படாத சபைகளை அடையாளம் காட்டி வசனத்தின்படி செயல்படும் கிறிஸ்துவின் சபையை உங்களுக்குக் காண்பிப்பதே. எனவே, இவைகளைப் புரிந்து கொண்டு சத்தியத்திற்குக் கீழ்ப்படிய உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

கிறிஸ்தவர்களுக்கிடையே அபிஷேகம் என்ற வார்த்தை பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இருப்பினும், இதைக் குறித்து சரியான மனோநோக்கு யாரிடமும் இல்லை. ஒவ்வொருவரும் பல வித்தியாசமான கருத்துக்களை, விளக்கங்களை கூறுகின்றனர். இதனால் அபிஷேகம் என்ற உன்னதமான உண்மைத் தன்மையை அநேகர் இன்று மாற்றிவிட்டார்கள். கிறிஸ்தவர்கள் என தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்களிடையே இதைக் குறித்த உண்மை நிலை இல்லாமல் தவறான எண்ணமே நிலவி வருகிறது. அதாவது, அபிஷேகம் பெற்றுக் கொண்டவர் அந்நிய பாஷைகளில் பேச வேண்டும். உரத்த சத்தத் தோடு ஜெபித்து, பிசாசுகளைத் துரத்த வேண்டும் மற்றும் குணமாக்கும் வரம் பெற்றிருக்க வேண்டும். இது போன்ற வித்தியாசமான செயல் களை செய்பவர்தான் அபிஷேகம் பெற்றவர் என்று நினைக்கிறார்கள். ஆனால், வேத வசனப்படி இக்கூற்று சரியானதா? இல்லையா? என்பதை நாம் அறிந்து கொண்டு உண்மை நிலைக்குத் திரும்புவோம்!

## I அபிஷேகம் என்றால் என்ன?

அபிஷேகம் என்பதற்கு எபிரெய வேதாகமத்தில் மாஷியாக (MASHIAH) என்றும், கிரேக்க வேதாகமத்தில் கிறிஸ்தொஸ் (XRISTORS) என்றும் உள்ளது. இந்த இரண்டு எழுத்துக்களின் கருத்தும் ஒன்றையே குறிக்கிறது. அதாவது, அபிஷேகம் என்றால் " ஊற்றுதல் " என்ற பொருளையே குறிக்கின்றது. இதன் அடிப்படையில் அரமேயுச் சொல் மேஷிகா (MESHIKA) என்று அதாவது மேசியாவாகிய கிறிஸ்து எனும் சொல் வந்துள்ளது. ஆகவே, அபிஷேகம் என்றால் ஊற்றுதல் என்று அர்த்தமாக உள்ளது.

ஒரு சமயத்தில் யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போக பிரயாணம் பண்ணி ஒரு இடத்தில்

வந்து சூரியன் அஸ்தமித்தபடியால் அங்கே ராத்தங்கி அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்துதன் தலையின் கீழ் வைத்து அங்கு நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான். அங்கே அவன் ஒரு சொப்பனம் கண்டான். இதோ ஓர் ஏணி பூமியில் வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும், இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனு மாகிய கர்த்தர். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னை திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கை விடுவதில்லை என்றார். யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக் கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல. இது வானத்தின் வாசல் என்றான். அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான் (ஆதி. 28:10,19). இந்த சமயத்தில் யாக்கோபு அந்தக் கல்லின் மேல் எண்ணெய் ஊற்றினான். அதாவது, அபிஷேகம் பண்ணி னார். ஆகவே, அபிஷேகம் என்பதின் அர்த்தம் ஊற்றுதல் ஆகும் (ஆதி. 31:13).

## II அபிஷேகம் பெற்ற மாதிரிகள்

தேவன் இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமணத்தைக் கொடுத்து அதில் உன் சகோதரனாகிய ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு நீ அந்த வஸ்திரங்களை அவர் களுக்கு உடுத்தி அவர்களை அபிஷேகம் செய்து அவர்களைப் பிரதிஷ்டை பண்ணி அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக என்று மோசேயிடம் கூறினார் (யாத். 28:41) அதன்படி, மோசே ஆரோனை யும், அவன் குமாரரையும் அழைத்து அபிஷேக தைலத்தை எடுத்து அவர்கள் தலைமேல் ஊற்றினான் (யாத். 29:7, லேவி. 8:1,10)

இஸ்ரவேலருக்குத் தீர்க்கதரிசிகளை அபிஷேகத் தைலத்தை அவர்கள் தலையின்மேல் வார்த்து (ஊற்றப்படுதல்) தீர்க்கதரிசிகளாக அபிஷேகம் பண்ணினார்கள் (1 இராஜா 19:16; சங். 105 :15).

அடுத்தது, இஸ்ரவேலருக்கு ராஜாக்கள் இவ்விதமாகவே அபிஷேகம் பண்ணப்பட்டனர். இஸ்ரவேலருக்கு முதல் ராஜாவான சவுலை சாமுவேல் தீர்க்கதரிசி தைலக்குப்பியை எடுத்து அவன் தலையின்மேல் வார்த்தான் (1 சாமு. 10:1)

இஸ்ரவேலருக்கு இரண்டாவது ராஜாவான தாவீதை சாமுவேல் தீர்க்கதரிசி தைலக்கொம்பை எடுத்து அவனை அபிஷேகம் பண்ணி னான். (1 சாமு. 16:13) இப்படியே சாலமோன் ராஜா அபிஷேகம் செய்யப்பட்டான் (1 இராஜா 1:34) இந்த மாதிரிகளின்படியே

இஸ்ரவேல், யூதா பிரிந்த ராஜ்யங்களின் ராஜாக்கள் அனைவரையும் அபிஷேகத் தைலத்தினால் தலையின்மேல் ஊற்றி அபிஷேகம் செய்தனர். சாதாரண மக்களுக்கு அபிஷேகம் இல்லை. உயர்ந்த ஸ்தானத்திலுள்ள தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், ராஜாக்கள் போன்ற வர்களுக்கே அபிஷேகம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## III கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்ட விதம்

கிறிஸ்து அல்லது மேசியா என்பதின் அர்த்தம் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாகும். இந்த அபிஷேகம் உலகப் பிரகாரமான தைலத்தினால் ஊற்றப்பட்டதல்ல! இது முற்றிலும் மாறு பட்டது ஆவிக்குரிய அபிஷேகமாகும். இந்த ஆவிக்குரிய அபிஷே கத்தை தேவன் செய்தார். *(சங். 2:2,6)* அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடும் பொழுது நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் என்று குறிப்பிடுகின்றார் *(அப். 10:38)*. அவர் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜாவாக ஆளுகை செய்யும்படி அபிஷேகம் செய்யப் பட்டார் *(லூக். 1:31-33; 4:18-21)* அவர் சுவிஷேசம் அறிவிக்கும்படி அபிஷேகம் பண்ணப்பட்டார் *(ஏசா. 61:1)* மேலும், நீதியை விரும்பவும், அக்கிரமத்தை வெறுக்கவும் தேவன் அவரை ஆனந்தத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் *(எபி. 1:9)* அபிஷேகம் என்ற உன்னதமான வார்த்தைக்கேற்ப இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், ராஜாதி ராஜாவுமாகவும் பரலோகத்தில் தேவனு டைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து நம்மை ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார் *(1 தீமோ. 6:14,15)*.

தேவன் பரலோகத்திலிருந்து இயேசு கிறிஸ்துவை உள்ளங்கால் துவங்கி உச்சந்தலை வரை பரிசுத்த ஆவியால் வார்த்தார். அதாவது, ஊற்றினார். அவர் பரிசுத்த ஆவியால் மரியாளின் கர்ப்பத்திலிருந்தார் *(லூக். 1:34,35)* தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்தார் *(யோவான் 3:34)* இவ்விதமாக பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவானவர் அந்நிய பாஷைகளை பேசி உரத்த சத்தமாய் உளறவில்லை. கூக்குரலிடவில்லை, பிசாசு களைத் துரத்துவதற்கு பலமுறை தோல்வி அடையவில்லை! ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற அவர் கெத்சமனே தோட்டத்தில் இரத்த வேர்வை சிந்தி அர்த்தத்தோடு ஆழமாக, உருக்கமாக ஜெபித்தார் இதுதான் ஆவியின் அபிஷேக ஜெபமாகும்.

## IV கிறிஸ்தவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட விதம்

இன்று கிறிஸ்தவர்கள் எப்படி அபிஷேகம் பண்ணப்படு கிறார்கள் என்தைப் பார்ப்போம்.

முதலாவது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ் நானம் பெறும் போது இரட்சிக்கப்படுகிறார்கள். *(மாற்கு 16:15,16)* இது ஆவிக்குரிய மறுபிறப்பு *(யோவான் 3:3,6)* ஆவியினால் பிறப்பது ஆவிக் குரிய பிறப்பாகும். ஆவி என்பது கிறிஸ்து சொல்லுகிற வசனங்கள் ஆவி யாயிருக்கிறது *(யோவான் 6:63)* வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால்

அருளப்பட்டிருக்கிறது (2 தீமோ. 3:16,17) எனவே, பரிசுத்த ஆவியி னால் கொடுக்கப்பட்ட தேவ வசனத்தின் மூலமாக பிறந்து, தேவ வசனத்தின் மூலமாக வளருகிறவன் கிறிஸ்தவன் (1 பேதுரு 2:3).

அப்படி தேவ வசனத்தின்படி செயல்படும்போது ஆவியினாலே நடத்தப்படுகிறார்கள் (ரோமர் 8:1) சகல சத்தியத்திற்குள் வழி நடத்தப் படுகின்றனர். அதாவது, வசனத்தின் மூலமாக நடத்தப்படுகின்றனர். தேவன் கிறிஸ்தவரை வேத வசனத்தின் மூலமாக விலைக்கு வாங்கி விட்டார் (1 கொரி. 6:19,20). அதாவது, அபிஷேகம் பண்ணி நம்மை பரிசுத்தம், பிரதிஷ்டை செய்து விட்டார் (2 கொரி. 1:21,22) ஆக, மொத்தத்தில் கிறிஸ்தவரின் உள்ளங்கால் துவங்கி உச்சந்தலை வரை பரிசுத்த ஆவியின் வசனத்தினால் ஊற்றப்படுகிறார்கள். அதாவது, அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள். இதைத்தான் அப்போஸ்தல னாகிய யோவான் நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத் தையும் அறிந்திருக்கிறீர்களே. சத்தியத்தை நீங்கள் அறியாததினால் அல்ல நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினால் .... நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் என்கிறார் (1 யோவான் 2:20,21,27).

" நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக் கிறது " . என்றார்.


" நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களால் நிலைத்திருக் கிறது " என்றார். அந்த அபிஷேகம் போதிக்கிறது என்றார்

அது (அபிஷேகம்) சத்தியமாயிருக்கிறது என்றார் (1 யோவான் 2:27)


ஆகவே, அபிஷேகம் போதிக்கிறது என்றால் வசனம் தானே போதனைக்குரியதாக இருக்கிறது (1 பேதுரு 4:11). கிறிஸ்துவின் வசனமே உபதேசமாகவும், சத்தியமாகவும் இருக்கிறது (யோவான் 8:31,32,17:17) இந்த சத்தியத்தால் வசனத்தினால் கிறிஸ்தவர் ஊற்றப் படுகிறார். அபிஷேகம் பண்ணப்படுகிறார். வசனத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்தவர்கள் வசனத்தை மட்டும் விசுவாசிக்கின்றனர். அந்த வசனம் அன்பு ஒருக்காலும் ஒழியாது என்றும், தீர்க்கதரிசன வரம் ஒழிந்து போகும் என்றும் அந்நிய பாஷை வரம் ஓய்ந்து போகும் என்றும் கூறுகின்றது (1 கொரி. 13:8,10) நிறைவான வசனம் பூரணப் படும்போது அதாவது, புதிய ஏற்பாடு எழுதி முடிக்கும்போது வரங்கள் ஒழிந்து போகும். (யாக். 1:25) புதிய ஏற்பாடு எழுதி முடித்து இரண்டாயிரம் வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இப்போது நமது கைகளில் புதிய ஏற்பாடு இருக்கிறது. இந்த சத்தியத்தைப் படித்துக் கீழ்ப் படிவது என்பது நமது கடமையாகும். சத்திய வசனத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்தவர் அந்நிய பாஷை என்ற பெயரில் ஏதோ ஒன்றை உளறாமல் தெளிவாகப் பேசுகிறார் (1 கொரி. 14:9).

நீங்களும் தெளிவான பேச்சை பேசும்படிக்கு சத்திய வசனத்தி னால், சுவிசேஷ வசனத்தினால் அபிஷேகம் பண்ணப்பட உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

(தொடரும்)




**உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வை வளப்படுத்துவதற்கு எங்களிடம் ஆயத்தமாக உள்ள**
**சத்தியத்தின் குரல் சர்வதேச காலாண்டு நூல்கள்**





ஜெபியுங்கள்
ஏப்ரல் 8-10,2013
தேதிகளில் சேலம் மாவட்டம்
ஏற்காடு மலையில்
நடைபெற இருக்கும்
ஊழியர்கள் கூட்டத்திற்காக
ஜெபியுங்கள்

சிறப்பு பேச்சாளர்கள்
**சகோ. ஜெர்ரி பேட்ஸ்** (Jerry Bates)
**சகோ. பவுலா பேட்ஸ்** (Paula Bates)
(For Ladies)

**நாகை மாவட்டம், தரங்கம்பாடி நற்செய்தி ஊழியத்திற்கு எங்களை**
**அழைத்த சகோ. செந்தில் மற்றும் சகோ. ஆனந்த வேல்**










**சுமார் 1050 கிலோ மீட்டர் தூரத்தை**
**உள்ளடக்கிய நான்கு நாள் நற்செய்தி பயணத்தில்**
**வினியோகிப்பதற்கு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட**
**ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் வேதாகமங்கள்**




**நற்செய்தி பயணத்தில் கீழ்ப்படிந்த**
**ஆத்துமாக்களில் ஒருவர்**
**சகோ. சுபாஷ். இவர் மூலமாக**
**மயிலாடுதுறையில் கர்த்தருடைய சபை**
**ஆரம்பமாக ஜெபியுங்கள்**




Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்


தபால் செலவிற்கு பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

# திருமறை தியானம்


## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.






## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor. S. Rajanayagam.